(ஆ) ஆம்; எனில், அப்பேருந்து விடும் திட்டம் எப்பொழுது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்ட மண்டலப் போக்குவரத்து அலுவலர் தக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

திரு. மே. அ. இராசகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப் பேருந்துவிடும் திட்டத்தில் அங்கு நிலம் வழங்கப்பட்டதாக கேள்விப்படுகிறோம். எவ்வளவு நிலம் இதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குறிப்பு என்னிடத்திலே இல்லை. பேருந்து விடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பராமரிப்பதற்கான நிலம் எவ்வளவு வாங்கப்பட்டிருக்கிறது என்ற குறிப்பு என்னிடத்திலே இல்லை.

ஆந்திராவிலிருந்து வரும் சுற்றுலாப் பேருந்துகளுக்கான வரிவிலக்கு.

*வினா எண். 396—திரு. சி. கோபால் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆந்திராவிலிருந்து தமிழ்நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பேருந்துகளுக்கு அரசு வரியை ரத்து செய்துள்ளதா ?

(ஆ) ஆம், எனில், அதனால் தமிழக அரசுக்கு எவ்வளவு ரூபாய் இழப்பு ஏற்படுகின்றது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) சுற்றுலா வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக பிற மாநிலங்களிலிருந்து மோட்டார் வண்டிகள் சட்டத்தின் பிரிவு 63(6)-இன் கீழ் உரிமம் பெற்று பிற மாநிலங்களிலிருந்து வரும் பேருந்துகளுக்கு அரசு வரி விலக்கு அளித்து ஆணை வழங்கியுள்ளது.

(ஆ) இதனால் தமிழக அரசுக்கு ஏற்படும் இழப்பு 1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் பிரிவு 63(6)-இன் கீழ் ஆந்திர மாநில போக்குவரத்து அதிகார மன்றங்களால் (Regional Transport Authorities) அனுமதி அளித்து தமிழ

1982 மார்ச் 6]

நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பேருந்துகளின் எண்ணிக்கையும் அவ்வண்டிகளிலுள்ள இருக்கைகளின் எண்ணிக்கையும் பொருத்த தேயாகும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசு வழங்குகின்ற இதுபோன்ற சலுகைகளை மற்ற மாநிலங்களிலே நம்முடைய வாகனங்களுக்கு வழங்கப்படுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழங்கப்படுகிறது.

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தினருக்கு புது பேருந்துகள் வாங்கும் திட்டம்.

*வினா எண். 397—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரும் மூன்று ஆண்டுகளுக்குள் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு மேலும் 555 புது பஸ்கள் வாங்கும் திட்டம் தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதுபற்றிய விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம் II-இன் கீழ் உலக வங்கியின் உதவியுடன் பல்லவன் போக்குவரத்துக் கழகம் பெருநகர் பிரிவு 555 ஒற்றை பேருந்து சட்டங்கள் (Chassis) வாங்க உத்தேசித்திருக்கிறது. திட்ட காலமான 1980–81 முதல் 1982–83 வரையில் இந்த 555 ஒற்றைச் சட்டங்களுள் 195 புது பேருந்துகள் விஸ்தரிப்புக்கும், 360 பழைய வண்டிகளை மாற்றி அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேருந்துகள் சென்னையிலேயிருந்து எவ்வளவு தூரம் வரை விடுவதற்கு உத்தேசம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, சென்னை பெருநகர்ப்பிரிவு என்று வைத்து அதற்காக ஒரு வரையறை வைத்திருக்கிறோம். ஏற்கெனவே ஒரு வரையறை இருக்கிறது. அதற்குள்தான் அது இயக்கப்படும்.